திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதி கல்லார் பழ ஆராய்ச்சி நிலையம் நல்ல தன்மை வாய்ந்தது. அது விரிவு படுத்தப்பட வேண்டுமென்று பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களே கூட கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஆராய்ச்சி செய்வதற்கேற்ற நல்ல வசதிகள், சூழ்நிலைகள் அங்கே இருக்கின்றன. எனவே, ஆராய்ச்சியில் அதிக ஆர்வம் காட்டுகின்ற நம்முடைய அமைச்சரவர்கள் அந்த பழ ஆராய்ச்சி நிலையத்தை விரிவுபடுத்த முயற்சி எடுத்துக் கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, அந்தப் பழ ஆராய்ச்சி நிலையத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று பண்டித நேரு அவர்களே ஆர்வம் காட்டியிருப்பதாகச் சொன்னார்கள். தமிழ் நாட்டி லுள்ளவர்களும் அதில் ஆர்வம் காட்டுவார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் நானும் கூட ஆர்வம் காட்டுகிறோம். கல்லார் பழ ஆராய்ச்சி நிலையத்திற்குப் பக்கத்திலே இருக்கின்ற நிலம் பாரஸ்ட் இலாக்காவைச் சேர்ந்தது. அவர்களைக் கேட்டதில் பழ ஆராய்ச்சிக்கு விரிவுபடுத்துவதை விட தேக்கு மரம், அல்லது மூங்கில் மரம் இவைகளை நட்டால் வருமானம் அதிகமாகும் என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் அதைப்பற்றி பேச்சுவார்த்தைகள் நடக்கின்றன.

ஐயாவையனாற்றின் கரையோரச் சாலை.

*678 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் தாலுக்காவில் ஐயாவையனார் ஆற்றங்கரையில் எத்தனை மைல் நீளத்திற்கு கப்பிச்சாலை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

(இ) எந்த இடத்திலிருந்து எந்த இடம் முடிய ?

(உ) அதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :

(அ) 7 கிலோ மீட்டர்.

(இ) காளி என்ற கிராமத்தையும், கொண்டல் கிராமத்தையும் இணைக்கிறது.

(உ) ரூ. 4·81 இலட்சம்

Price of sun-flower seeds.

*679 *Q.*—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposals to fix the price of the sun flower seeds ; and

(*b*) if so, the details of the same ?

TRUTH ALONE TRIUMPHS